*பகுதி 3:*

# எழுதப்பட்ட பாடங்களில் காணப்படும் வேதவசனங்கள் பற்றிய இரு கண்ணோட்டங்கள்

*புத்தகங்கள், விளக்கவுரைகள், பத்திரிக்கைகள் மற்றும் இணையதளத்தில் காணப்படும் பாடங்கள் போன்ற எழுதப்பட்ட கருத்துக்கள், வேதவசனங்கள் பற்றி சுதந்தரமான அல்லது பழைமை வாதக் கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கலாம். வேதவசனங்கள் பற்றிய பழைமை வாதக் கண்ணோட்டம் என்பது வேதாகமத்தின் வாய்மொழி ஏவுதலில் உள்ள நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது (2 தீமோத்தேயு 3:16, 17). சுதந்தரமான கண்ணோட்டம் என்பது வேதாகமத்தின் தெய்வீக ஏவுதலை மறுக்கிறது.[1] சுதந்தரமான யூகங்களின் அடிப்படையில் அமைந்த எழுத்துக்களை அடையாளப்படுத்த மாணவருக்கு உதவுவதற்காக, வேதாகமத்தைக் கண்ணோக்குதலில் இரு வழிகளிக்கு இடையிலான பின்வரும் நேரெதிர் ஒப்பீடுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.*

| ***வேதவசனங்களைப் பற்றிய பழமை வாதக் கண்ணோக்கு:*** | ***வேதவசனங்களைப் பற்றிய சுதந்தரமான கண்ணோக்கு:*** |
|---|---|
| *1. வேதாகமத்தின் புத்தகங்கள் பெரும்பான்மையும் ஒருங்கிணைந்த பணிகளாக உள்ளன.* | *1. வேதாகமத்தின் புத்தகங்கள் பெரும்பான்மையும் தொகுப்புப் பணிகளாக, பல்வேறு ஆதார மூலங்களில் இருந்து திரட்டப்பட்டவைகளாகவும், மிகநீண்ட காலத்தினூடே, ஆசிரியர்கள் அவற்றை ஒன்றாக அமைத்தவைகளாகவும் உள்ளன.* |
| *2. வேதாகமத்தின் புத்தகங்கள் வழக்கமாக, புத்தகத்தின் தொடக்கத்தில் தோன்றும் பெயர் கொண்டவராலேயே எழுதப்பட்டன. வசனப் பகுதியானது எழுத்தாளரின் பெயரைக் குறிப்பிடவில்லை என்றால், அதை எழுதியவர் பற்றிய பழங்காலப் பாரம்பரியம் வழக்கமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.* | *2. வேதாகமத்தின் புத்தகங்கள், பல புத்தகங்களின் விஷயங்களில், நாம் பெயர் அறிந்திராத தனிநபர்களால் எழுதப்பட்டன. ஒரு புத்தகத்தில் ஒருவர் பெயர் உள்ளது என்பதோ அல்லது எழுத்தாளர் பற்றிப் பாரம்பரியம் கூறுவதோ, அதை அவர் எழுதினார் என்று நிரூபிப்பது இல்லை.* |

3. வேதாகமத்தின் புத்தகங்கள் சார்பளவில் முற்காலத்தில் எழுதப்பட்டிருந்தன.

3. வேதாகமத்தின் புத்தகங்கள் சார்பளவில் பிற்காலத்தில் எழுதப்பட்டிருந்தன.

4. நிகழ்வுகள் நடந்துள்ளவை என்ற வகையில் வேதாகமம் பேசும்போது அவைகள் வரலாற்று ரீதியானவைகளாக மதிக்கப்படுகின்றன.

4. சில விஷயங்கள் நடந்திருந்தன என்று வேதாகமம் கூறுகிறது என்ற உண்மையானது, அது உண்மையிலேயே நடைபெற்றது என்பதை நிரூபிப்பதில்லை. வேதாகமத்தின் "வரலாற்று" பாகங்கள், உண்மை, புராணம் மற்றும் கற்பனைக் கதை ஆகியவற்றின் ஒன்றிணைவாக உள்ளன. அற்புதங்கள் உள்ளடங்கிய விபரங்கள் வரலாற்று ரீதியானவை அல்ல, ஏனெனில் அற்புதங்கள் நடைபெற முடியாது.

5. வேதாகமம் முழுமையும் ஏவுதல் பெற்றது என்பதால், அது ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது, அதில் உண்மையில் நேரெதிர்த் தன்மைகள் எதுவும் இருப்பதில்லை. வேதாகம இறையியல் - வேதாகமம் முழுவதிலும் போதிக்கப்படும் இறையியல் - பற்றிப் பேசுதல் சாத்தியமாக உள்ளது.

5.வேதாகமம் தெய்வீக ஏவுதல் பெற்றது அல்ல என்பதால், அதில் நேரெதிர்க் கருத்துக்கள் உள்ளன. உண்மையில், வெவ்வேறு எழுத்தாளர்கள் மற்றும் வெவ்வேறு புத்தகங்கள், வெவ்வேறு இறையியல்களைப் போதிக்கின்றன(ர்). ஆகவே ஒருங்கிணைந்த வேதாகம இறையில் பற்றி ஒருவர் பேச இயலாது.

6. வாசிப்பவர் தம்மிடம் தேவன் கேட்டுக் கொள்வது என்ன என்பதையும் தாம் இரட்சிக்கப்படக்கூடுவது எவ்வாறு என்பதையும் கண்டறிய, வேதாகமத்தைப் படித்துப் புரிந்து கொள்ளுதல் என்பதே அவரது பணிப்பொறுப்பாக உள்ளது.

6. வேதாகமம் எழுத்துக்களினூடே, வசனப்பகுதியின் சந்தர்ப்பப்பொருளையும் அது விவரிக்கும் மக்களையும் பற்றிக் கண்டறிதல் மாணவரின் பணிப்பொறுப்பாக உள்ளது.

---

குறிப்பு

[1]இத்துடன் கூடுதலாக, வேதவசனங்கள் பற்றிய சுதந்தரமான கண்ணோட்டமானது, இயேசுவின் தெய்வீகம், அவர் கன்னியிடம் பிறந்தது மற்றும் உயிர்த்தெழுந்தது மற்றும் அற்புதங்களின் உண்மைநிலை ஆகியவற்றையும் மறுக்கிறது. அது மனிதவரலாற்றில் இடையிட்டுள்ள, ஆளுமைத்தன்மை கொண்ட அன்புகூரும் தேவனுடைய இருப்பையும் மறுக்கிறது. புரொட்டஸ்டன்டுகள், இந்த உண்மைநிலைகளை *உறுதிப்படுத்தும்* புரொட்டஸ்டன்டுகள், "பழைமைவாதிகள்" அல்லது "சுவிசேஷ ஊழியம் செய்பவர்கள்" அல்லது "அடிப்படை வாதிகள்" என்று அறியப்படுகின்றனர். ("அடிப்படைவாதிகள்" என்பது பழைமைவாதிகளை அவமானப்படுத்தும் நோக்கம் கொண்ட சொற்றொடராக உள்ளது; பெரும்பான்மையான பழைமைவாதிகள் இதைத் தங்களுக்குப் பயன்படுத்த மாட்டார்கள்.)